முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் தேரையர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

22.09.2018, சனிக்கிழமை

1. **ஆறுமுக சித்தியே அரங்கா வாழ்க**
**ஆற்றல்பட அறம் வளர்த்துமே**
**ஏறுமுகம் இந்த வையகம் காண**
**ஏழாம் படை வீடு படைத்த ஞானியே**
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் ஒளி சூட்சும நூலை
இனிமைபட **விளம்பி தரிவை திங்கள்**
**இருமூன்று திகதி காரி வாரம்தனில்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 6ம் நாள் 22.09.2018, சனிக்கிழமை)**
3. தன்னிலே தேரையர் யானும்
தாமுரைப்பேன் உலக நலம் பெற
அண்ணல் அரங்கன் சேவை
அகிலம் காக்கும் சக்தியாய் இருக்க
4. இருக்கவே துறையூர் மண்ணில்
இயம்பிடுவேன் அரங்கன் சீடர்களென
கருத்தாக உள்ள மக்களெல்லாம்
கட்டாயம் பெரும் பேறடைவர்
5. அடைவரே சுத்தநெறி ஏற்று
அரங்கனே எல்லாமென நம்பி
தடையிலா தொடர் தொண்டும்
தருமத்தில் உதவி புரிபவர் எல்லாம்
6. எல்லோரும் ஆறுமுகன் தேடுகின்ற
ஈடேறும் நன் மக்களாகி
வல்லமைபட வரங்களடைந்து
வாழும் காலமே சித்திநிலை பெறுவர்
7. நிலைபடும் ஞான உலகில்
நிகழ்த்துவேன் இடம் பெற்று
வளமுற அரங்கன் தேர்வில்
வாழும் ஞானிகளும் ஆவர்
8. ஆகவே கலிகால மக்களே
ஆசை வழி மாயை வழியே
யுகத்தில் பெரிய சந்தோஷமென
உங்களை நசித்து வரும் நிலைகளை

9. நிலைகளை மாற்றி அமைக்க
நிலைத்தன்மை அடைந்து சிறக்க
சளைக்கா அரங்கன் தரும
சபைக்கு வாரீர் தொடர்ந்து

10. தொடர்ந்து தொண்டுகள் செய்து
தொடர் தருமம் பரவ பெருக
தடையிலா சேவை ஆற்றி
தன்னார்வ உயர் தொண்டர்கள் ஆகி

11. ஆகியே அரங்கன் வழியில்
ஆறுமுகன் துணைபெற வாரீர்
மகிழும்படி சேவையை ஆற்றி
மரணம் வெல்ல வாரீர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் தேரையர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஆறுமுகப்பெருமானின் வெற்றி வடிவமே அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க, எல்லையில்லா ஆற்றலுடன் அறத்தினை உலகினில் வளர்த்து உலகம் உயர்வடையவே ஏழாம் படை வீடாய் துறையூர் ஓங்காரக்குடிலினை படைத்து மக்களை வழிநடத்தும் மகா ஞானியே அரங்கமகாதேசிகனே உமது புகழை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 6ம் நாள் 22.09.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே தேரையர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் தேரையர்.

அண்ணல் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அற்புதமான தானதரும தொண்டுகளும் ஞானத் தொண்டுகளும் உலகைக் காக்கும் அருள்சக்தியாக தருமசக்தியாக இருக்கின்றதப்பா.

ஆதலினால் ஞானபூமியாம் துறையூரினிலே ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை நாடி அரங்கனின் சீடர்களாக ஆகி உள்ள மக்களெல்லாம் உறுதியாக பெரும்பேற்றினை அடைந்திடுவார்கள். அரங்கனின் சீடர்கள் அரங்கன் வகுத்திட்ட தூயநெறியினை ஏற்று கடைப்பிடிப்பதுடன் எவ்வுயிரையும் கொலை செய்யாமல், உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு உலக உயிர்கள்பால் ஜீவதயவுடன் நடந்து கொள்வார்கள். ஆறுமுக அரங்கமகா தேசிகனே எல்லாம் ஒன்றே அரங்கனின் சீடர்கள் ஆனவர்கள் அரங்கன் திருவடிக்கு கீழ் சரணாகதியாகி அரங்கனுக்கே அடிமைகளாகவும் ஆகியே அரங்கன் தொண்டினை தமது கடமையாக சிரம் மீது தாங்கி தடையின்றி மனச்சலனமும் சோர்வும் இல்லாமல் தொடர்ந்து தொண்டுகள் செய்வார்கள். இவ்விதமே அரங்கனின் தூயநெறி ஏற்று அரங்கன் திருவடிக்கு கொத்தடிமையாகி அரங்கனே எல்லாமென நம்பிக்கையோடு தொடர்ந்து தடையின்றி தொண்டு செய்வதுடன் அரங்கனின் தானதருமப் பணிகளை தமது பணிகளாக ஏற்று தடையின்றி தருமத்திற்கு உதவிகள் செய்து வருகின்ற அரங்கனின் சீடர்கள் எல்லோரும் முதுபெரும் ஞானத்தலைவன் மூலமுதல்வன் முருகப்பெருமான் உலக மாற்றம் நிகழ்த்திடவே தேடுகின்றவர்களாய் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளக் கூடிய நன்மக்களாக ஆகி முருகப்பெருமானின் தேர்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு முருகப்பெருமானின் அன்பையும் அளப்பரிய வரங்களையும் வல்லமைகளுடன் அடைந்து அவர்கள் வாழும் இந்த ஜென்மத்திலேயே முருகப்பெருமானால் வழிநடத்தப்பட்டு சித்திகளை பெறுவார்கள்.

இனிவருங்காலங்களில் இவ்வுலகினில் அமையும் மாறாத நிலையான ஞானஉலகினில் இடம் பெற்று அரங்கனின் சூட்சும தேர்வினில் அவர்கள் தேர்ச்சி பெற்று அரங்கன் வாழும் காலமே அவர்களும் வாழும் ஞானிகளாக அரங்கனால் ஆக்கப்படுவார்கள்.

ஆகவே கலியுகத்தின் மாயையுள் சிக்கித் தாக்கும் மக்களே நீங்கள் மாயையின் பிடியினுள் அகப்பட்டு ஆசை வழியில் சென்று நீங்கள் நுகரும் மாயாபுலன் கவர்ச்சி செயல் இன்பங்களை இந்த யுகத்திலேயே நாம் பெற்ற பெரிய சந்தோசம் இதுவென மயங்கி உழன்று நீங்கள் மாயையினால் நசிந்து போவது கூட தெரியாமல் நசிந்து வருகின்ற அறியாமை நிலைகளை மாற்றி அமைத்திடவும், மாற்றி அமைத்து என்றும் மாறா இளமையும் மரணம் தவிர்த்த நிலைத்தன்மையும் அடைந்து சிறப்படைய வேண்டுமாயின் நீங்கள் ஒருபோதும் சலிப்படையாமல் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கனின் தருமசபைக்கு தொடர்ந்து தவறாமல் வர வேண்டும்.

அன்பு மக்களே அரங்கன் சபைக்கு வந்த உடனேயே அனைத்தும் கிடைத்துவிடாது. அவரவர் தகுதிக்கும் தொண்டிற்கும், பக்திக்கும், பணிவிற்கும் ஏற்பதான் வரம் பெறலாம். ஆதலினால் நாம் எதையும் பெற முடியவில்லையே என சலிப்படையாமல் நமது பாவம் தீர்ந்து புண்ணியம் பெற்று அரங்கன் அன்புக்கு ஆளாகி அடிமையாகி அனைத்தும் பெற்று ஞானமடையும் வரையிலும் சோர்வின்றி தொண்டுகளை செய்வதுடன் அரங்கனின் தொடர் தருமம் உலகமெலாம் பரவிப் பெருகிட தங்குதடையின்றி தொண்டுகளை தன்னார்வத்தோடு செய்திடுங்கள்.

உலகோரே அரங்கனின் தருமத்தில் பங்கு கொண்டு தன்னார்வ தொண்டர்களாக ஆகி அரங்கன் வழியில் தவறாது நடந்து முருகப்பெருமானின் துணையை பெற்று கடைத்தேறிட வாரீர் வாரீர்.

அரங்கன் மகிழும்படி, ஆறுமுகன் மகிழும்படி, உலக ஞானிகள் எல்லாம் மகிழும்படி தொண்டுகளை செய்து மரணம் வென்று மரணமிலாப் பெருவாழ்வினை வாழ்ந்திட வாரீர் வாரீர் மக்களே என உலகோரை கூவி அழைத்து ஞானம் பெற்று கடைத்தேறிட உபாயம் உரைக்கின்றார் மகான் தேரையர்.

–சுபம்–